**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 176/2023** | **நாள் – 06.02.2026** | **சாட்சி – ம.சா.1** |

**திரு. கோவிந்தராஜ், த/பெ. சுப்பிரமணியன்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த தேதி மாதம் வருடம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த நேரம் தெரியுமா என்றால் இரவு 7.30 மணி இருக்கும். எனக்கு கண்பார்வை குறைபாடு உள்ளதா என்றால் வலதுகண்ணில் குறைபாடு உள்ளது. விபத்து நடந்த இடம் எங்கு என்றால் ஆண்டாங்கோவில் பேருந்து நிறுத்தம் அருகில் துகிலி கிராமத்தில் விபத்து நடந்தது. எனக்கு வயது எவ்வளவு என்றால் 65 ஆகும். நான் மனு தாக்கல் செய்த 2023 அன்று எனது வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் எனக்கு வயது 70 க்கு மேல் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகன்கள். மூத்த மகனுக்கு எத்தனை வயது என்றால் தெரியவில்லை. எனது பேரப்பிள்ளைகளுக்கு 20 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த போது எந்த திசையில் சென்றேன் என்றால் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலையில் விபத்து நேரத்தில் சைக்கிளை நிறுத்தியிருந்தேன். எதற்காக சைக்கிளை சாலை பகுதியில் நிறுத்தினேன் என்றால் எதிரே ஒருவர் பூ வேண்டும் என்று கேட்டதால் நான் சைக்கிளை நிறுத்தினேன். நான் அப்போது பூ வியாபாரம் செய்து கொண்டு சென்றிருந்தேனா என்றால் ஆமாம். நான் எத்தனை மணி

வரை பூ வியாபாரம் செய்வேன் என்றால் 7.30 மணி வரை பூ விற்பேன். விபத்து நடந்த சமயத்தில் நான் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். பொதுவாக 7 அல்லது 7.30 மணியளவில் வீட்டிற்கு சென்று விடுவேன் என்றாலும் விபத்து நடந்த போது அவ்வாறு செல்லவில்லையா என்றால் நான் சென்று கொண்டிருந்த போது பூ வேண்டும் என்று ஒருவர் கை காட்டி எனக்கு எதிரில் கூப்பிட்டதால் அவரிடம் செல்வதற்காக சைக்கிளை திருப்புவதற்காக நின்றேன். வலதுபுறம் இரண்டு அடி நகர்ந்திருப்பேன் என்றால் சரிதான். பின்புறம் வந்த 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மோதிவிட்டாரா என்றால் பின்னால் வந்து மோதிவிட்டார். விபத்து நடந்த சாலை அகலமான தார் சாலை என்றால் சரிதான். நான் அவசரமாக பூ கொடுப்பதற்காக இருபுறமும் சாலையை பார்க்காமல் வலதுபுறம் திடீரென்று கடந்ததால் பின்புறம் வந்த 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மோத நேரிட்டது என்றால் சரியல்ல. நான் இருபுறமும் பார்த்து சாலையை கடந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் நான் பார்ப்பதற்குள் வண்டி மோதிவிட்டது. அவ்வாறு கவனமாக பார்த்து திரும்பியிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை வாகனங்கள் அதிகமாக செல்லும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் என்னை வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றாலும், பிறகு கும்பகோணம் அரசு மருத்துவமனை பின், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து எனக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் மூன்று நாட்கள் சிகிச்சை

பெற்றேன். எனக்கு எலும்பு முறிவோ, தலையில் அடியோ ஏற்படவில்லை என்றால் இடதுகையில் அடிப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வயதான காலத்தில், இரவு நேரத்தில், கண் சரியாக தெரியாமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும், மருத்துவ செலவு எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ செலவிற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும், அதனை 2ம் எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.06 16:46:12 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*